Y. M C A


விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

[illegible] 88 மார்கழி 28 ஜூ ஆகிர் பிறை 25 இதழ்: 262

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 12-01-1991


## ஆனையிறவு, இயக்கச்சியில் கடும் விமானத் தாக்குதல்

(பளை)

ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு, இயக்கச்சி ஆகிய பகுதிகளில் நேற்றுக்காலை பலத்த விமானத் தாக்குதல் இடம்பெற்றது. வை-12 ரக விமானமும், பொம்மர், அவ்ரோ ஆகியனவும் இப்பகுதியிலுள்ள கட்டிடங்கள் மீது தாக்குதல் நடாத்தின.

இத்தாக்குதலின்போது சந்தையில் வியாபாரம் செய்ய வந்த இரு அப்பாவி மக்கள் சிறு காயங்களுக்குள்ளாகினர்.

[4-ம் பக்கம் பார்க்க]

## இராணுவம் எரித்தனர் ரெலோ சுட்டனர்

(மட்டுநகர்)

மட்டுநகர் மண்டூர் இராணுவத்தினர், கல்முனை வைத்திய சாலைக்கு சுகயீனம் காரணமாகச் சென்ற கண்ணமுத்து தினகரத்தினம் என்பவரை உயிருடன் ரயர்போட்டு எரித்துகொலைசெய்துள்ளனர்.

இதேநேரம் மட்டுநகரில் ரெலோ உறுப்பினர்கள் ராசமாணிக்கம் சின்னமுத்து (வயது-35) என்னும் நாலு பிள்ளைகளின் தயாரை சுட்டுக் கொலைசெய்துள்ளனர். (வி)

## விடுதலைப் புலிகளின்

# யுத்த நிறுத்தம் தொடர்கிறது

# அரசின் தாக்குதல் ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசு மீண்டும் இராணுவ தாக்குதலை ஆரம்பித்துள்ளபோதிலும் தமது காலவரையற்ற யுத்த நிறுத்தத்தை தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்போவதாக புலிகள் அறிவித்துள்ளனர். தமது தற்பாதுகாப்புக்கு மாத்திரம் தேடிவரும் படையினரை திருப்பிச் சுடவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

## அரசு விடுத்த அறிக்கை

விடுதலைப் புலிகள் ஒருதலைபட்சமாக பிரகடனம் செய்தயுத்தநிறுத்தத்தை தொடர்ந்து மீறி வருவதால் விடுதலைப்புலிகளுக்கு எதிராக அரசுகடைப்பிடித்து வந்த தாக்குதல் நடவடிக்கை நிறுத்தத்தைதொடர்ந்தும் கடைப்பிடிக்கமுடியாது என அரசாங்கம் நேற்று தெரிவித்துள்ளது.

(3-ம் பக்கம் பார்க்க)

## கட்சி ஆலோசனை நிராகரிப்பு

விடுதலைப் புலிகளுடன் தொடர்ந்தும் யுத்த நிறுத்தத்தை கடைப்பிடித்து, பேச்சுவார்த்தைக்கு பல நிபந்தனைகளை முன்வைக்குமாறு எதிர்கட்சிகள் ஆலோசனை கூறியபோதும் முதலாவது ஆலோசனை அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் சகல கட்சிப் பிரதி நிதிகளுடனும் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்த வேண்டுமென்றும் இக்கட்சிகள் அரசை கோரியுள்ளன.

எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகள் அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு ஆரயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ் குழுக்கள் வரவேற்பு

விடுதலைப்புலிகளுக்கு எதிராக அரசு மீண்டும் தாக்குதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதை கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள்வரவேற்றுள்ளன. இலங்கையின் ஒருமைப்பாட்டை தாம் தொடர்ந்தும் ஆதரிக்கப்போவதாகவும் அவை ஜனாதிபதிக்கு தெரிவித்துள்ளன. இதற்கு தாம் சகல உதவிகளையும் அரசுக்கு வழங்கவுள்ளனவாம்.

## ராஜதந்திரிகள் பெரும்கவலை

வடக்கு-கிழக்கில் மீண்டும் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பது குறித்து வெளிநாட்டு ராஜதந்திரிகள் பலர் கவலை தெரிவித்துள்ளனர். நல்லதொரு சந்தர்ப்பம் தவறவிடப்பட்டதன் மூலம் நாட்டில் மீண்டுமொரு இரத்தக்களரி ஏற்படும் அவலம் தோன்றியிருப்பதாகவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

புரிந்துணர்வின் அடிப்படையில் இரு தரப்பினரும் பிரச்சனைக்கு தீர்வுகாண முற்பட வேண்டுமென்றும் கேட்டுள்ளனர்.

## தமிழ் குழுக்கள் வருகின்றன

தமிழகத்திலிருந்து பல தமிழ்க்குழுக்களை சேர்ந்த 284பேர் கொழும்பு வந்து சேர்ந்துள்ளதாக கூறப்படுகிறது. விடுதலைப் புலிகளை தவிர்ந்த ஏனைய குழுக்களை சேர்ந்தவர்களே இவ்வாறு கொழும்பு வந்துள்ளனர்.

இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டபின் இவர்கள் நேற்று முன்தினம் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் வந்து சேர்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பலர் இங்கு வரலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## கிழக்கில் இராணுவம் தேடுதல்

மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை மாவட்டத்திலும் நேற்று இராணுவத்தினர் தாக்குதல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர். தமிழர் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஏஜென்ஸி செய்தி ஒன்று நேற்றிரவு தெரிவித்தது.

(4ம் பக்கம் பார்க்க)

## மருதனாமடம் சந்தியில் ஒருவருக்கு மரணதண்டனை

(காங்கேசன்துறை)

சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டமைக்காக மருதனாமடம் சந்தியில் ஒருவருக்கு நேற்று விடுதலைப்புலிகளால மரணதண்டனை வழங்கப்பட்டது.

கோப்பாய்வடக்கு இராச வீதியைச் சேர்ந்த அப்பாக்குட்டி தனபாலு [43 வயது] என்பவருக்கே இந்த மரண தண்டனை வழங்கப்பட்டது.

கொலை, கொள்ளை, காட்டிக்கொடுத்தல் போன்ற பல்வேறு சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டதற்காகவே இவருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது. (86)

## வலி - வடக்கில் நேற்று இராணுவம் தாக்குதல்

(காங்கேசன்துறை)

வலி-வடக்கில் நேற்று அதிகாலைமுதல் இராணுவம் ஷெல் தாக்குதலையும், துப்பாக்கிப் பிரயோகத்தையும் கடுமையாக மேற்கொண்டது. எனினும் புலிகள் தாக்குதல் எதனையும் மேற்கொள்ளவில்லை.

நேற்று அதிகாலை 5-10மணியளவில் பலாலி முகாமிலிருந்து வளலாய், ஒட்டகப்புலம், செல்வநாயகபுரம் ஆகிய பகுதிகளை நோக்கி துப்பாக்கிப்பிரயோகமும் ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று அதிகாலை 6மணியளவில் கட்டுவன் மினி முகாம் ராணுவத்தினர் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகமும் பலத்த ஷெல் தாக்குதலும் மேற்கொண்டு முகாமிலிருந்து வெளியேவர முயற்சித்தனர்.

விடுதலைப் புலிகள் தமது நிலைகளில் இருந்து எதிர்த் தாக்குதல் எதுவும் செய்யவில்லை, இடையிடையே

(4-ம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழகம் இயங்க 10 லட்சம் ரூபா தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்திற்கு மாதாந்தம் 10 லட்சம் ரூபா திரவப் பணமாக கிடைத்தால் தான் தொடர்ந்தும் இயங்கக் கூடிய சாத்தியமுண்டு என தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மகாபொல நன்கொடை, மாணவர் உதவிப்பணம், அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்தல் ஆகிய மூன்றுக்கும் மாதாந்தம் 10 இலட்சம் ரூபா திரவப் பணம் அவசியமாக தேவை.

மாதாந்தம் 10 லட்சம் ரூபாதிரவப் பணமாக கிடைத்தால்தான் யாழ். பல்கலைக் கழகம் தொடர்ந்து இயங்கக் கூடிய சாத்தியம் உண்டு.

கடந்த வருடம் கப்பல் மூலம் ஒவ்வொருமுறையும் இலங்கை வங்கியாழ். கிளைக்கு பணம்வரும் போது 10 லட்சம் ரூபா திரவப்பணம் யாழ். பல்கலைக்கழகத்திற்கு கிடைத்

(4-ம் பக்கம் பார்க்க)

## மிதிவெடியில் சிக்கிய லொறி

(பூநகரி)

வடபகுதியிலிருந்து கொழும்பு சென்ற ஒரு லொறி வவுனியாவில் இராணுவ தடை முகாமருகே மிதிவெடியில் சிக்குண்டதாம்.

இதனால் லொறியின் முன்பகுதி பலத்த சேதமடைந்துள்ளது. மேலும் வடபகுதியிலிருந்து 10ற்கும் மேற்பட்ட லொறிகள் கொழும்பு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளன. [23]

# "வவுனியா நகரில் மக்கள் மீண்டும் குடியமர அனுமதிக்க வேண்டும்"

## பிரஜைகள் குழு கோரிக்கை

(வவுனியா)

வவுனியா நகர்ப்பகுதியில் மக்கள் இடம்பெயர்ந்துள்ள இடங்களில் அவர்கள் மீண்டும் குடியமர்வதற்கு அனுமதிக்கப்படவேண்டும் என்று வவுனியா பிரஜைகள் குழு சிறிலங்கா இராணுவ அதிகாரிகளைக் கேட்டுள்ளது.

"வவுனியா புகையிரத நிலைய வீதி, குட்செட் வீதி, கரப்பன்காடு, குருமன்காடு, போன்ற இடங்களில் அகதிகள் மீளக்குடியமர்வதற்கு அனுமதிப்பதோடு சிறிலங்கா இராணுவம், பொலிசார் நிலைகொண்டுள்ள தனியார் வீடுகளையும் மீள ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்" என்றும் பிரஜைகள் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக பிரஜைகள் குழுவினால் எழுதப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வவுனியாவுக்கும் அனுராதபுரத்திற்கும் இடையிலான கண்டி வீதியில் இருக்கும் இராணுவ, பொலிஸ் தடை முகாம்களின் எண்ணிக்கையைக் குறைப்பதுடன், நீண்ட தூரத்திற்கு பொதுமக்களை நடந்து செல்ல வைப்பதைத் தவிர்த்துச் சோதனை நடைபெறும் இடங்களில் மட்டும் பயணிகளை இறக்கிச் சோதனையிட வேண்டும். இதனால் பயணிகள் வீணான காலதாமதத்திற்கு உள்ளாவதுடன், தமது பிரயாணப் பொதிகளில் எடுத்து வரும் பெறுமதிமிக்கப் பொருள்களை இழக்கநேரிடுகிறது.

வவுனியா புகையிரத நிலைய நிலையத்திற்கு தண்ணீர் மற்றும் மின்சார, இதர வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

குடிசப்பிள்ளையார் குளம், சேமக்காலைப் பகுதியை பொதுப்பிரதேசமாக்கி, கட்டுப்பாடுகள் எதுவுமின்றி பொதுமக்கள் அங்கு சென்று ஈமக்கிரியைகள் மேற்கொள்வதற்கு வசதிசெய்துதர வேண்டும். [153]

---

# வரி விளம்பரம்

## கல்வி

ஆண்டு 6 தேசியப் பாடசாலைக்கான போட்டிப்பரீட்சைக்கு கணிதம், தமிழ் ஆகிய பாடங்களில் விசேடமாகத் தேறுவதற்கு கற்பிக்கமுடியும். அனுபவமுள்ள ஆசிரியர், 85 சிவன் கோவிலடி, திருநெல்வேலி.

[சி-4255]

---

## ஆங்கிலப் பரீட்சை

(அராலி)

இலங்கை திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில் உயர்நிலை ஆங்கில கற்கை நெறியினை மேற்கொண்டிருக்கும் மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சைகள் இம்மாதம் 12ம், 13ம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

யாழ். பிராந்திய நிலைய மாணவர்களுக்கு யாழ். பிராந்திய நிலையத்திலேயே பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

---

## காகிதத் தொழிற்சாலை நி[illegible]வப்படுகிறது

(நல்லூர்)

யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக காகிதத்தாள் உற்பத்திசெய்யும்ஆலை ஒன்று நிறுவப்படவுள்ளது.

இம்மாதம் 14ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் திறப்பு விழா நடைபெறும். இந்த ஆலை முறைசாராக் கல்விப்பிரிவு அதிகாரி ச. சுப்பிரமணியம் முயற்சியால் நிறுவப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (152)

---

# நெல் விற்பனையின்றி விவசாயிகள் திண்டாட்டம்

(திருமலை)

திரியாய் கிராமத்தில் போதிய நெல் அறுவடை செய்யப்பட்டிருந்தும் இங்குள்ள விவசாயிகள் தமது நெல்லை விற்கமுடியாது திண்டாடுகின்றனர்.

இங்கு அறுவடை செய்யப்பட்ட நெல்லை கொள்வனவு செய்வதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி கிராமத்து மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் குச்சவெளி உதவி அரசாங்க அதிபர் ஊடாக தற்போது ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

66 குடும்பங்களைச் சேர்ந்த 135 பேர் இக் கிராமத்தில் வசிக்கின்றனர். (153)

---

# கிளிநொச்சியில் உரத்திற்கு பெரும் தட்டுப்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் உரத்திற்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இதனால் நெல்வேளாண்மையில் பெரும் பாதிப்பு நிலவுகிறது.

வவுனியாவில் இருந்து உரம் எடுத்துவரவும் இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை.

கிளிநொச்சியில் இருந்து உரம் கொண்டு வரச் சென்ற லொறிகள் இதுவரை திரும்பிவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. [83]

---

## பொலிஸில் பதிய வேண்டும்

(கொழும்பு)

வடபகுதியிலிருந்து கொழும்பு வரும் மக்கள் தாங்கள் தங்கியிருக்கும் வீடுகளுக்கு அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களில் தமது பெயர்களை பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதனால் தங்கியிருப்போருக்கு ஏற்படும் அசௌகரியங்களை தவிர்த்துக்கொள்ளலாமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (எஸ்)

---

## தவறவிடப்பட்ட மோதிரம்!

(நாவற்குழி)

சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியை செல்வி பராசக்தி நடராசாவினால் சாவகச்சேரி கண்டி வீதியில் தெய்வேந்திரா படமாளிகைக்கு முன்பாகக் கண்டெடுக்கப்பட்ட பெயர் பொறிக்கப்பட்ட சுமார் முக்கால் பவுண் எடையுள்ள தங்கமோதிரம் ஒன்று விடுதலைப்புலிகளின் சாவகச்சேரி வட்டப் பொறுப்பாளர் அலுவலகத்தில்ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி மோதிரத்தைத் தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி சாவகச்சேரி வட்டப்பொறுப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். [107]

---

## செயலாளராக நியமனம்

(திருகோணமலை)

மட்டக்களப்பு முன்னாள் அரசாங்க அதிபர் திரு. ஆர். யோகநாதன் வடக்கு கிழக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (153)

---

# இராசி பலன்

12-01-1991

சனிக்கிழமை

அனுஷம் பிற்பகல் 12-53 வரை. துவாதசி நள்ளிரவு 12-25 வரை. சித்தயோகம் இராகுகாலம் காலை 9-33 முதல் 11-03 வரை. சுபநேரம் காலை 3-38 முதல் 5-03 வரை.

மேடம்: குடும்பச் சச்சரவு, பணக் கஷ்டம், தொழில் குறைவு. காரிய தாமதம், சனித் தொல்லை.

இடபம்; தொழிற் பிணக்கு, எதிர்பாராத துன்பம், கணவரால் கஷ்டம், குடும்பப் பிரிவு, செலவு.

மிதுனம்: வாக்கினால் தனலாபம், மனைவி வழியில் விரயம். விருந்துபசாரம், பொதுப் பணி.

கடகம்; வாக்கு வன்மை புதிய முதலீடு, தொழில் சிறப்பு, குடும்ப உல்லாசம், புத்திரர் மகிழ்ச்சி.

சிம்மம்; மனக் கொதிப்பு, உடல் நலம் பாதிப்பு, கருத்து வேறுபாடு, தொழில் நஷ்டம்.

கன்னி: கோபதாபம், அதிகாரிகள் கெடுபிடி, கடின உழைப்பு, அவசியமற்ற பயணம்.

துலாம்; விரோதியை வெல்லுதல், தொழிற் சிறப்பு, மனக் குறை, குடும்ப விரோதம். அலைச்சல்.

விருச்சிகம்: அந்நிய வாசம், தொழிற் கஷ்டம், பழைய நினைவுகள், குடும்பக் கருத்து மோதல்.

தனுசு: புதிய சிந்தனை, காரிய லாபம், தாயன்பு, குடும்ப மகிழ்ச்சி, அதிகாரிகள் பாராட்டு.

மகரம்; தொழிலாளர் பிணக்கு, குடும்பத்தில் அமைதியின்மை, படபடப்பு, கடன் சுமை.

கும்பம்: அதிகாரிகள் சினம், வேலைப்பழு, தூரப் பயணம், நண்பர்கள் பகை, குடும்பக் கவலை.

மீனம்: விவேகமற்ற முடிவு, உடற் சோர்வு. தொழில் ஆதாயம், காரிய தாமதம், அகால போசனம்.

'ஜோஸ்யர்.

---

## இணக்கமன்று கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி வலிகாமம் பகுதிகளிலுள்ள இணக்க மன்று உறுப்பினர்கள் பொறுப்பாளர்களுக்கான விசேட கருத்தரங்கு இன்று 12ம் திகதி நடைபெறவுள்ளது.

தென்மராட்சி பிரிவிற்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும், வலிகாமம் பிரிவிற்கு கோண்டாவில் இந்துமகா வித்தியாலயத்திலும் இக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

---


## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

## அறிவித்தல்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாயபீடத்தில் குடிசார் எந்திரவியல் (புதிய / திருத்த) வேலைகளைச் செய்ய விரும்பும் தனியார் / கூட்டுறவு/ கிராம அபிவிருத்திச்சங்க ஒப்பந்தகாரர்கள் 15-01-1991—16-01-1991 வரை திருநெல்வேலி வளாகத்தில் அல்லது 22-01-1991—23-01-1991 வரை கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாய பீட அலுவலகத்தில் வேலை நேரங்களில் பல்கலைக்கழக வேலைகள் எந்திரவியலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

தனியார் ஒப்பந்தகாரர்கள் (ICTAD) அல்லது ஏதாவது அரச நிறுவனத்தில் பதிவு செய்திருப்பதோடு பின்வருவனவற்றையும் சமர்ப்பிக்கவேண்டும்.

1. கிளிநொச்சி மாவட்டத்தில் ஏதாவது அரசநிறுவனமொன்றில் ரூபா 100,000/-க்கு குறையாத குடிசார் ஒப்பந்த வேலையை பூர்த்தி செய்த ஆவணத்தின் பிரதி.
2. கிளிநொச்சி மாவட்டத்தில் ஒப்பந்தகாரரின் தலைமை அலுவலகம் அல்லது கிளை அலுவலகம் அமைந்திருப்பதை உறுதிப்படுத்தும் ஆவணத்தின் பிரதி.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

(எ-981)


---


# 7-ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## திரு. சண்முகம் சிவசம்பு

(உரிமையாளர் சிவலஷ்மி கபே)



உதிப்பு:
13-06-1902

இறப்பு:
12-01-1985

இல்லற விளக்கே நீர் எம்மை விட்டுப் பிரிந்து ஏழு ஆண்டுகள் மறைந்துவிட்டன. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும்:

சிவசம்பு அன்னம்மா, அன்னலஷ்மி.

சிவலஷ்மி கபே,
66, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-4264)


---


# ST. PATRICK'S COLLEGE, JAFFNA

## WANTED

Temporary Teacher for Advanced Level Botany
Apply giving particulars before 18th January 1991.

RECTOR.

(A-982)

## அரசு விடுத்த

(1ம் பக்க தொடர்ச்சி)

அரசாங்கத்தின் தற்காலிக தாக்குதல் இடைநிறுத்தம் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் முடிவடைந்துள்ளது. அரசிடம் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை கவனமாக பரிசீலனைசெய்தும், தற்போதைய நிலைமைகளை மதிப்பீடுசெய்துமே மேற்படி முடிவுக்கு அரசாங்கம் வந்துள்ளது.

விடுதலைப்புலிகள் இராணுவப் பிரிவுத் தலைவர் திரு. வே. பிரபாகரனை மீண்டும் அரசுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறும் அரசாங்கம் கேட்டுள்ளது

இத்தகைய பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கு முன்னர் சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டவர்களை தவிரவேறு எந்த இயக்கமும் ஆயுதங்களை வைத்திருப்பதற்கும் பயன்படுத்துவதற்கு அனுமதிப்பதற்கு சட்டப்படி பிரகடனம்செய்யப்படவேண்டும்.

இத்தகைய பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதற்கு சகல அரசியல் கட்சிகளும் அழைக்கப்படும்.

விடுதலைப்புலிகள் இந்த நிபந்தனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளுக்கு விடுக்கப்படும் அழைப்பை ஏற்றுக்கொண்டால் அவர்களுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளை இடைநிறுத்தி வைப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது.

எனினும் தைப்பொங்கல் தினமான 14ம் திகதி வடக்கு-கிழக்கு பகுதிகளில் தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்திவைப்பதென அரசு முடிவுசெய்துள்ளது.

விடுதலைப் புலிகள் தாங்கள் பிடித்துவைத்திருக்கும் சகல பணயக்கைதிகளையும் விடுதலைசெய்யவேண்டும். இனிமேலும் எவரையும் கடத்திச்சென்று பணயக்கைதிகளாக தடுத்து வைத்திருக்கக்கூடாது என்றும் தெரிவித்துள்ளது; கைதிகளை துன்புறுத்துவதையும் அவர்களுக்கு மரணதண்டனை விதிப்பதையும் நிறுத்திக்கொள்ள வேண்டும். கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு பொதுமக்களை பயன்படுத்துவதையும் நிறுத்திக்கொள்வேண்டும்.

அப்பாவிச் சிறுவர்களையும், குடிமக்களையும் போர் புரிவதற்காக இயக்கத்தில் சேர்த்துக்கொள்வதனை விடுதலைப் புலிகள் நிறுத்திக்கொள்ளவேண்டும். பொதுமக்களுக்கு எதிரான பழிவாங்கும் நடவடிக்கைகளையும் விடுதலைப் புலிகள் நிறுத்திக்கொள்ள வேண்டும். பொதுமக்களின் ஆதரவைப் பெறும்பொருட்டு அவர்களை வதிப்புறுத்தும் சகல நடவடிக்கைகளையும் புலிகள் நிறுத்திக்கொள்ளவேண்டும்.

பணயம் வைத்திருப்பவர்களைச் சந்திப்பதற்கு மனிதாபிமான அடிப்படையில் அனுமதிக்கவேண்டும்.

விடுதலைப் புலிகள் கடந்த மாதம் 31-ம் திகதி ஒருதலைப்பட்சமாக யுத்தநிறுத்தப் பிரகடனம் செய்ததையடுத்து அரசாங்கம் அவர்களுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளை இம்மாதம் 3-ம் திகதி நள்ளிரவிலிருந்து ஏழு நாட்களுக்கு இடைநிறுத்தி வைத்தது.

கடந்த மாதம் 31-ம் திகதி முதல் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை அரசாங்கம் உன்னிப்பாகக் கண்காணித்து வந்தது. நேற்றுவரை விடுதலைப் புலிகளின் 34 யுத்த நிறுத்த மீறல் சம்பவங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் பெரும்பாலானவை உயிரிழப்புகளை ஏற்படுத்திய பாரதூரமான யுத்த நிறுத்த மீறல் சம்பவங்களாக இருந்தன. பதுங்குகுழிகளை

(4-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் பாடசாலைகளில் பிறமத அதிபர்கள் நியமனம் பெற்றோர் போர்க்குரல்!

(கண்டி)

குருநாகல் மாவட்டத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளில் பிறமத அதிபர்கள், ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருப்பது குறித்து இங்குள்ள பெற்றோர்கள் போர்க்குரல் எழுப்பியுள்ளனர்.

இம்மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பாடசாலைகளில் முஸ்லிம்களும் சிங்களப் பாடசாலைகளில் சிங்களவர்களும் அதிபர்களாகவும், ஆசிரியர்களாகவும் கடமையாற்றி வருகிறார்கள். ஆனால் தமிழ் பாடசாலைகளில் மட்டும் பிறமத அதிபர் ஆசிரியர் நியமிக்கப்படலாமா? என்று இப்பகுதி பெற்றோர்கள் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக இ. தொ. கா. தலைவர் அமைச்சர் தொண்டமான், ராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி ஆகியோரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் உள்ள பிரவத்தகமை சாஸ்வதி தமிழ் வித்தியாலயம், நொட்டிங்கி தமிழ் வித்தியாலயம், தொரதன்ன தமிழ் வித்தியாலயம், பொல்காவலை சீ. சீ. எம். எஸ். தமிழ் வித்தியாலயம், உடப்பொல தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலே பிறமதத்தைச் சேர்ந்தவர்கள் அதிபர்களாகவும், ஆசிரியர்களாகவும் கடமையாற்றி வருவதனால் தமிழ் மாணவர்களின் சமய கலாசார துறைகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## வில்வம் கன்று இலவசம்

[யாழ்ப்பாணம்]

திருக்கோவில்களில் நடுவதற்கு வில்வங்கன்றுகள் தம்மிடம் நேரில் விண்ணப்பித்து இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாமென மில்க்வைற் ஸ்தாபனத்தினர் அறிவிக்கின்றார்கள்.

## என்ன சங்கதி?

கடந்த போர்க்காலத்தில் வழக்கமாக, அதிகாலை அல்லது இரவு பயணம்தான் அதிகம்.

சில தினங்களுக்கு முன் தென்மராட்சிக்கு 'பகல் பயணம்' சென்றிருந்தேன். போவதும் வருவதுமாக ஆயிரத்திற்கு மேற்பட்ட சைக்கிள்கள். இரண்டொரு லொறிகள். சிலவாகனங்கள், வண்டிகள்.

வானம் மப்பும் மந்தாரமாக, பயணத்திற்கு இதமாக இருந்தது. களைப்பே தெரியவில்லை. இரண்டு மூன்று பிள்ளைகளுடன் ஒரு குடும்பமே சைக்கிளில் செல்வது வியப்பை தந்தது. ஹெலியொன்று வந்த போதும் எவருமே! அதனை கவனத்தில் எடுக்கவில்லை. போர் நிறுத்தம், எதுவும் நடக்காது என்ற ஒரு அசட்டு துணிச்சல்.

திரும்பும்போது நேரமாகிவிட்டது. சரியான இருள்; எந்தச் சைக்கிளுக்கும் வெளிச்சம் கிடையாது. அந்த செம்மணி வெளியில் எப்படித்தான் போகிறார்களோ! தெரியவில்லை. வீதியும் மிகவும் சிறிது. அக்கம்பக்க வயல் பள்ளம்; கொஞ்சம் நிதானம் இழந்தால் ஆபத்து.

பெரும் சுமைகள், பொதிகளுடன் தடுமாற்றம் எதுவுமின்றி இரவு ஏழு, எட்டுமணிக்கு பின்னரும் கூட பயணங்கள் தொடர்கிறது.

வல்லை, முள்ளி, செம்மணி, கைதடி, கோப்பாய், கல்லுண்டாய் மற்றும் கடல் வழி வெளிகளில் இப்போ எல்லாம் பகல் பயணம் அதிகரித்துள்ளது.

மழைக்குளிர், பனிக்குளிரில் நடுநடுங்கி இரவிலும் அதிகாலையும் கடந்த மாதம் பயணம் செய்தவர்களுக்கு இந்தப் பகல் பயணம் பறவாயில்லை.

'ஊரோடி'

# இம்மாதம் 20-ம் திகதி பண்டிதர், பாலபண்டிதர் வகுப்புக்கள் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்)

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்க பண்டிதர், பால பண்டித வகுப்புக்கள் இம்மாதம் 20-ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

யாழ் நாவலர் மகா வித்தியாலயத்தில் இவ்வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

க. பொ. த. (உயர்தர) வகுப்பில் தமிழ்ப் பாடத்தில் திறமைச்சித்தி பெற்றவர்கள் பாலபண்டித வகுப்பிலும், பாலபண்டித அல்லது கலைத் தகுதிகாண் பரீட்சையில் சித்தி எய்தியவர்கள் பண்டிதர் வகுப்பிலும் சேரலாம் என்று மேற்படி சங்கத்தின் செயலாளர் திரு. க. சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார் (ரி)

# கால்நடைகளை கட்டுப்படுத்த றூட் நிறுவனம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

''இன்றைய சூழ்நிலையில் ஒவ்வொரு விவசாய பயிரும் பெறுமதிமிக்கவை. ஆகவே கால்நடைகளை கட்டாக்காலியாக திரியவிடாது உற்பத்தி வளம் காப்பாற்ற ஒவ்வொருவரும் முன்வர வேண்டும் என்று தமிழீழ ஆய்வு நிறுவனம் ''கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தல்'' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: நெல் வயல்களில் அல்லது ஏனைய தோட்டங்களில் பயிர்களை மேயும் கால்நடைகள், கட்டாக்காலியாக பொது இடங்களில் உலாவும் கால்நடைகள் ஆகியவற்றை கட்டுப்படுத்தும் நோக்குடன் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் கீழுள்ள ஒவ்வொரு கிராமிய உற்பத்திக் குழுவிலுமிருந்து ஐந்து பேர் கொண்ட குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தோட்டக்காரரோ, கால்நடை பிடிப்பாளரோ இக்கட்டாக்காலை கால்நடைகளைப் பிடிக்கலாம் பிடிக்கப்பட்ட கால்நடைகள் மேற்படி தெரிவு செய்யப்பட்ட குழுவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இக்குழு பகிரங்கமாக அமைக்கப்பட்ட பராமரிப்பு இடத்தில் கால்நடைகளைப் பராமரிக்கும்.

மாடு ஒன்றிற்கு பத்து ரூபாவும் ஆடு ஒன்றிற்கு ஐந்து ரூபாவும் நாளாந்த பராமரிப்பு செலவாக அறவிடப்படும்;

கால்நடையால் ஏற்பட்ட சேதப்பெறுமதி, கால்நடை பிடிபட்ட இரண்டு நாட்களுள் உரியவரிடம் பெற்று கால்நடை கையளிக்கப்படும். சேத மதிப்பீடு குழுவினால் மதிப்பிடப்படும்.

2 நாட்களுள் உரியவர் தொடர்பு பெறமுடியாவிடின் அதன் நிறம், குறி, வயது, பால் ஆகிய விபரங்களுடன் பிரசித்த அறிவிப்பு செய்யப்படும்.

பிரசித்த அறிவிப்பின் பின்னரும் உரியவர் அறியப்படாவிடின் 10 நாட்களின் பின் பகிரங்க ஏலத்தில் இந்த கால்நடைகள் விற்கப்படும்.

ஏலத்தின் மூலம் பெறப்படும் பணத்தில் செலவு கழிய மீதி தமிழீழ ஆய்வு நிறுவனத்துக்குச்சேரும்- பிடிகாரர் மாடு ஒன்றிற்கு ஐம்பது ரூபாவும் ஆடு ஒன்றிற்கு இருபத்தைந்து ரூபாவும் கூலியாகப்பெறுவர் குற்றப்பணம் மாடு ஒன்றிற்கு அறுபது ரூபா ஆடு ஒன்றிற்கு இருபத்தைந்து ரூபா செலுத்தப்படவேண்டும். (வி)

## திருடப்பட்ட சைக்கிள் மீட்பு

[பண்டத்தரிப்பு]

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் திருடப்பட்ட லேடீஸ் சைக்கிள் ஒன்று கட்டுடையில் வீடு ஒன்றிலிருந்து மீட்கப்பட்டது.

மேற்படி கல்லூரியில் சைக்கிள் தரிப்பு நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மாணவி ஒருவரின் ஹுமாலா லேடீஸ் சைக்கிள் கடந்த வாரம் காணாமல் போய்விட்டது. இதுபற்றி கிடைத்த இரகசிய தகவலை அடுத்து இக்கல்லூரியின் செயலாளரும், கிராம சேவை அலுவலருமான திரு. ச. சிவகுமாரன் கட்டுடையிலுள்ள வீடொன்றிலிருந்து திருடப்பட்ட சைக்கிளை மீட்டுள்ளார். (72)

## ஓய்வூதிய வவுச்சர் தபால் மூலம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்திற்கு நேற்று முன்தினம் வந்துள்ள அக்டோபர் மாத பென்சன் வவுச்சர்கள் தபால்மூலம் ஓய்வூதியகாரர்களுக்கு அனுப்பப்படவுள்ளது.

ஒக்டோபர் மாத பென்சனுக்குரிய கட்டு நிதியும் வந்துள்ளது; அடுத்தவாரம் வங்கிகளில் ஒக்டோபர் மாத பென்சனை பெறலாமென தெரிவிக்கப்படுகிறது.

யாழ் செயலகத்தில் இம்முறை ஓய்வூதிய வவுச்சர்கள் வழங்கப்படமாட்டாது; வவுச்சர்கள் யாவும் தபால் மூலம் அனுப்பப்படவுள்ளது;

நவம்பர், டிசெம்பர் மாதங்களில் பென்சன் கட்டுநிதி வந்ததும் இம்மாதங்களுக்குரிய பென்சன் வவுச்சர்கள் காலக்கிரமத்தில் ஓய்வூதியக்காரர்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (153)

## பலதும் பத்தும்

### கென்னடி படுகொலை!

ஜோன் கென்னடி படுகொலை மிகத் திறமையாகவும், நுணுக்கமாகவும், திட்டமிட்டுச் செய்யப்பட்ட படுகொலையாகும். இதுபற்றி எத்தனையோ புதுப்புதுத் தகவல்கள் இப்போது வெளியாகியுள்ளன.

கென்னடியைச் சுட்டுக் கொல்வதற்கு அவர் வந்த பாதையெங்கும் பல கொலைகாரர்கள் ரிவால்வருடன் காத்திருந்தனர். ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு அவர் வந்தவுடன், அனைவரும் ஒரே சமயத்தில் சுடவேண்டும் என்பதே சி.ஐ.ஏ.யின் திட்டம். அவர்கள் அனைவருக்கும் கேட்கும் கருவிகள் கொடுக்கப்பட்டிருந்தன; அவன் ஐந்து என்று சொல்லும்போது அனைத்துக் கொலையாளிகளும் தாங்கள் நின்ற திசைகளிலிருந்து ஒரே சமயத்தில் சுடவேண்டும் என்பதே ஏற்பாடு.

கென்னடியின் கார் வந்ததும், குடை வைத்திருந்தவன் கைப்பிடி அருகில் வாயை வைத்து எண்ணினான். ஐந்து என்று கூறும்போது நாலா பக்கத்திலும் இருந்து துப்பாக்கிகள் வெடித்தன! குடையின் நுனி அன்றெனவாகச் செய்தி பரிமாறியது.

'ஞானி'

வடபகுதி நோக்கி

# உணவுப் பொருள்களுடன் 275 லொறிகள் வருகின்றன!

(யாழ்ப்பாணம்)

வடபகுதி நோக்கி உணவுப் பொருட்களை ஏற்றி வந்த 275 லொறிகள் வவுனியாவில் இராணுவத்தினரின் அனுமதிக்காக தரித்துநிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவிலுள்ள இராணுவ தடைமுகாமிலிருந்து ஈரப்பெரியகுளம்வரை இந்த லொறிகள் வரிசையாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

இந்த லொறிகளில் மண்ணெண்ணை உட்பட பல அத்தியாவசிப் பொருட்கள் ஏற்றி வரப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று இந்த லொறிகளுக்கு இராணுவ அனுமதி வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டபோதிலும் இச்செய்தி அச்சுக்குப்போகும் வரை இவ் லொறிகள் யாழ்ப்பாணம் வந்து சேரவில்லை.

இன்று இந்த லொறிகள் யாவும் யாழ். வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ரி)

## கிழக்கில் இராணுவம் தேடுதல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்குப்பகுதியில் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கை தீவிரப்படுத்தப்படவுள்ளதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கென புதிய திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# காட்டுக்கு செல்லும் தமிழர்

அரசின் தாக்குதல் நிறுத்த நடவடிக்கையை அடுத்து மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தமது வீடுகளுக்கு திரும்பிய தமிழர் நேற்று நண்பகல் மீண்டும் காடுகளுக்குள் தஞ்சமடைந்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த யுத்த நிறுத்தம் மூலம் காணமல் போன தமது குடும்ப உறுப்பினர்களையும் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படுமென நினைத்த பல தமிழர்கள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனராம்.

# இராணுவ முகாம்கள் திறப்பு

தமிழ்நாட்டின் சகல மாவட்டங்களிலும் தமிழ்போராளிகளின் நடவடிக்கைகளை கண்காணிக்க இராணுவ முகாம்கள் திறக்கப்பட்டு வருவதாக இந்தியா சென்று திரும்பிய ஒருவர் 'ஈழநாடு' வுக்கு தெரிவித்தார். இந்த முகாம்கள் திறக்கப்பட்டிருப்பதால் சாதாரண இலங்கையர் எல்லாம் போராளிகள் என சந்தேகிக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எஸ்)

# தமிழக தினசரிகளில் புலிகள்

சென்னையில் இருந்து வெளியாகும் சகல பத்திரிகைகளும், விடுதலைப் புலிகள் பற்றியே அண்மைக்காலமாக தலைப்புச்செய்திகள் வெளியிட்டுவருகின்றன. கார்ட்டூன்களும், தமிழக முதல்வரையும் விடுதலைப் புலிகளையும் சித்தரிப்பதாக அமைந்திருக்கின்றது.

அ. தி. மு. க. செயலர் செல்வி ஜெயலலிதா, வாழப்பாடி இராமமூர்த்தியின் அறிக்கைகள் விமர்சனத்துடன் வெளியிடப்பட்டு வருகின்றது. (எஸ்)

# முல்லைத்தீவில்விமான தாக்கு

முல்லைதீவில் நேற்று காலை 6. 30 மணியளவில் 2 பொம்மர்கள் கடும் தாக்குதலை நடாத்தியுள்ளன, இதன் போது கடற்பகுதியிலிருந்து பலத்த பீரங்கி தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொம்மர். பீரங்கி தாக்குதல்கள் சில மணிநேரம் இங்கு இடம் பெற்றது, இதனால் பல கட்டிடங்களும், வீடுகளும் பலத்த சேதமடைந்தன.

# தலைமை பீடம் முடிவுசெய்யும்

இலங்கை அரசு தாக்குதல் நிறுத்தத்தை கைவிட்டு மீண்டும் இராணுவ நடவடிக்கை மேற்கொண்டிருப்பது குறித்து புலிகளின் தலைமைப்பீடம் முடிவு செய்யுமென புலிகளின் சர்வதேச விவகார பொறுப்பாளர் திரு. கிட்டு தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசின் உண்மை நிலை இதன் மூலம் உலகிற்கு நன்கு தெளிவாகுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். (வி)

# பரவலாக இராணுவ தாக்கு

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்றுக்காலை 6.30 மணியளவில் வெளியேறி கட்டுவன், குரும்பசிட்டி பகுதிகளை நோக்கிவந்த படையினர் புலிகளின் காவலரண்கள் மீது கடும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டதில் வைதேகி என்ற பெண்போராளி காயமடைந்தார். துப்பாக்கிச்சூட்டில் 6 வேங்கைகள் காயமடைந்தனர்.

மாவிட்டபுரத்தில் அதிகாலை 1.15 மணியளவில் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் ஒரு போராளி காயமடைந்தார்.

வவுனியா காமினி மகாவித்தியாலயத்தில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்றுக்காலை 5 மணியளவில் வெளியேறிவந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தவாறு முன்னேக்கி வந்தனர், புலிகளின் காவலரண்மீது தாக்குதலை நடாத்திவிட்டு பின் முகாம் திரும்பினர்.

மன்னார் தள்ளாடி இராணுவமுகாமிலிருந்து நேற்றுக்காலை 6.30 மணியளவில் வெளியேறிய இராணுவம் முன்னேறிவந்து புலிகளின் காவலரண் மீது தாக்குதலை நடாத்திவிட்டு பின் சென்றனர் (வி)

# பாரிஸிலிருந்து திலகர் பேட்டி

(பாரிஸ்)

ஸ்ரீலங்கா அரசின் இனப்படுகொலையை நிறுத்தவும் சமாதான முயற்சிக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கவும் புலிகள் காலவரையற்ற யுத்தநிறுத்தத்தை அறிவித்ததாக புலிகள் பிரமுகர் திரு. திலகர் பி. பி. ஸிக்கு பேட்டியளித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் அரசின் படுகொலையை உலகுக்கு தெரியப்படுத்தவும், சொல்லொணாத் துயரடைந்த அவர்களுக்கு நிவாரணமளிக்கவுமே தைப்பயன்படுத்தவிருந்தோம் நாம் இந்த யுத்த நிறுத்தத் என்றார்.

## வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்படையினர் கடந்த பத்தாம் திகதி பகல் 11 மணியளவில் விடுதலைப் புலிகள் மீது மேற் கொண்ட தாக்குதலில் கப்டன் மாஸ்டர் வீரமரணம் அடைந்தார். (வி)

## விளைவு சூடம் விற்பனையானது

(யாழ்ப்பாணம்)

அரசாங்கம் வடபகுதிக்குக் கற்பூரம் எடுத்துவரத் தடைவிதித்திருந்தும், நேற்று யாழ்ப்பாணத்தில் பெரும் எண்ணிக்கையில் விளைவுசூடம் விற்பனைக்கு வந்திருந்தது. [எஸ்]

# 700 அடையாள அட்டை யாழ். வந்துள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு கொழும்பிலிருந்து 700 புதிய தேசிய அடையாள அட்டைகள் வந்துள்ளன.

700 புதிய அடையாள அட்டைகளும் உரியவர்களுக்கு தபால்மூலம் யாழ். ஆட்பதிவுத் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜூலை, ஆகஸ்ட், மாதங்களில் விண்ணப்பித்திருந்த விண்ணப்பதாரிகளுக்கு தேசிய அடையாள அட்டைகள் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (152)

## அரசு விடுத்த

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைத்தல், விடுதலைப் புலிகள் மீள திரளுதல் போன்ற பல்வேறு சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

இம்மதிப்பீட்டின் அடிப்படையில் விடுதலைப் புலிகள் சமாதானத்தை விரும்பும் உண்மையான நோக்கத்துடன் யுத்தப் பிரகடனத்தைச் செய்யவில்லையென்று அரசாங்கம் கருதுகிறது.

ஆனால் மோசமான முறையில் சிதறுண்டு கிடக்கும் இயக்கத்தினரை மீண்டும் திரட்டிக் கொள்வதற்கான கால அவகாசத்தைப் பெறும் ஒரு யுக்தியாகவே இது அரசாங்கத்திற்குப் புலப்படுகிறது என்று அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாதம் 9-ம் திகதி விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்று அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிறது, அரசாங்கத்தினால் தற்காலிக தாக்குதல் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படுவதன் மூலம் விதித்துள்ள நிபந்தனைகள் நியாயமற்றவை என விடுதலைப் புலிகள் கருதுகின்றனர்.

அரசாங்கம் அதன் தாக்குதல் நடவடிக்கைகளை 7நாட்களுக்கு இடைநிறுத்திவைத்தது விடுதலைப்புலிகள் நடவடிக்கைகளை அறிந்துகொள்வதற்கேயாகும். இக்காலப்பகுதியில் பொதுமக்களின் பாதுகாப்புக் கருதியும் அரச மேலாண்மையையும்ஒழுங்கையும் வலியுறுத்துவதற்காகவும் இராணுவ ரோந்து நடவடிக்கை அவசியமாக இருந்தது.

சட்டபூர்வமாக தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் சிவில் நிர்வாகத்தையும் பிராந்திய ஒருமைப்பாட்டையும் பேணுவதற்கு விடுக்கப்பட்ட ஆகக்குறைந்தபட்ச நிபந்தனை இவையாகும்.

இச்சிறு கடமைகளையாவது நிறைவேற்றுவதில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்கும் குடிமக்களை பாதுகாப்பதற்கும் அரசாங்கத்திற்குரிய கடப்பாட்டினை கைவிடுவதாக அமையும். இவ்வளவுகாலமும் விடுதலைப் புலிகளினால் விடுக்கப்பட்ட அறிக்கைகள் யாவும் இவ்வியக்கத்தின் அரசியல் பிரிவின் மூலம் விடுக்கப்படுகிறது என்பதனை அரசாங்கம் கவனத்தில் கொள்கிறது,

எவ்வாறாயினும் தனியே இடம்பெறும் நடவடிக்கைகள் விடுதலைப்புலிகளின் இராணுவ பிரிவுதான் நிர்வகித்து வருகிறது.

எனவே வருங்காலத்தில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெறுமாயின் விடுதலைப்புலிகளின் இராணுவப் பிரிவே கலந்துகொள்ளவேண்டும் என்றும் அரசாங்கம் வலியுறுத்துகிறது.

வடக்கு-கிழக்கு பிரச்சனை தொடர்பாக சமாதான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு அரசாங்கம் தன்னை அர்ப்பணித்துக்கொள்கிறது என்றும் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கின் தேர்தல் தொகுதிகளில் வாழ்கின்ற தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் ஆலோசனைகளை பெறும் வாய்ப்பு 10ம் திகதி மாலையில் அரசுக்கு கிடைத்துள்ளது. (க)

## பல்கலைக் கழகம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தது.

யாழ். பல்கலைக்கழகத்திற்கு போதியளவு திரவப்பணம் கிடையாத காரணத்தால் அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்ய இயலாத நிலைமைக்கும் கொடுப்பனவுகளை வழங்க முடியாத நிலைமைக்கும் தள்ளப்பட்டுள்ளது.

இம்முறை குமண கப்பலில் மக்கள் வங்கிக்கு $2\frac{1}{2}$ கோடி ரூபா பணம் வந்ததும் யாழ். பல்கலைக்கழகத்திற்கு 3லட்சம் ரூபா திரவப்பணம் மட்டும் கிடைத்தது.

## வலி. வடக்கில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆகாயத்தை நோக்கி வேட்டுகளைத் தீர்த்தனர்.

அரைமணி நேரமாக தாக்குதலை மேற்கொண்ட இராணுவத்தினர் பின்னர் முகாம் திரும்பி இடையிடையேஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். பலாலியில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் கட்டுவன், ஏழாலை, மாவிட்டபுரம், கிளானை ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

யுத்த நிறுத்த அறிவிப்பால் தமது வீடுகளுக்குத் திரும்பியிருந்த பலபொதுமக்கள் இராணுவத்தின் இந்த திடீர் தாக்குதலால் நிலைகுலைந்து பாதுகாப்புத்தேடி ஓடினர்.

ஹெலிகொப்டர்களும் நேற்று முன்தினமிரவும் நேற்றும் வலி. வடக்குப்பகுதியில் ரோந்துசுற்றின. (86)

## ஆனையிறவு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இயக்கச்சிச் சந்தியிலிருந்த நான்கு கடைகள் பலத்த தாக்குதலுக்குள்ளாயின. மேலும் இயக்கச்சிச் சந்திக்கு அருகிலிருந்த வீடுகள், மகா வித்தியாலயம் ஆகியன பலத்த சேதமடைந்தன. தென்னை, பனை மரங்கள் பல முறிந்த நிலையில் காணப்பட்டன,

இதையடுத்து பளை சந்தைப் பகுதி வெறிச்சோடியது. அலுவலகங்கள் யாவும் மூடப்பட்டன.

## கருணாநிதி சஹாய் சந்திப்பு

(சென்னை)

தமிழக நிலை குறித்து இந்திய உள்துறை இணையமைச்சர் திரு. சுபோத்கான் சஹாய் தமிழக முதல்வரைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடாத்தியுள்ளார்.

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு ஜனவரி மாதம் 12ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.